RBI 2004/42
DBOD.NO.BP.BC.66/21.04.117/2003-2004 பிப்ரவரி 05, 2004

தலைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள்
அனைத்துப் பொதுத்துறை வங்கிகள்

அன்புடையீர்

**ரூ10 கோடி வரை பொதுத் துறை வங்கிகளின்
செயலற்ற சொத்துக்கள் மீது சுமூகமான ஒப்பந்தம் -
மாற்றியமைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள்**

2003 மே 23 தேதியிட்ட எங்கள் சுற்றறிக்கை DBOD.NO.BP.BC. 108/21.04.117/2002-2003ஐப் பார்க்கவும். ரூ10 கோடி வரையிலான செயலற்ற சொத்துக்களை சமூகமான ஒப்பந்தம் வாயிலாக தீர்த்து வைப்பதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கான இறுதி நாளான 2003 அக்டோபர் 31ஆம் தேதியை 2003 டிசம்பர் 31 என்று நீட்டி இருந்தோம்.

2. ரூ10 கோடி வரையிலான செயலற்ற சொத்துக்களை சுமூகமான ஒப்பந்தம் மூலம் தீர்த்து வைப்பதற்காக விண்ணப்பங்களை பரிசீலனைக்கு ஏற்கும் தேதியை மேலும் கால அவகாசம் கொடுத்து நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, அரசைக் கலந்து ஆலோசித்ததில், கால அவகாசம் 2004 ஜூலை 31ஆம் தேதி முடிய நீட்டிக்கப்படுகிறது. 2004 ஜூலை 31 தேதி முடிய ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களை 2004 அக்டோபர் 31க்குள் பரிசீலனை செய்திடல் வேண்டும்.

3. கிடைத்தமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

நம்பிக்கையுள்ள

C.R. முரளீதரன்
தலைமை பொது மேலாளர் பொறுப்பு